1975 மார்ச் 13]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அத்தகைய குறைகள் ஏதேனும் இருக்குமானால், போக்குவரத்துத் துறை மானியத்தில் அது பற்றி தெரிவிப்பாரானால், அரசு நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும்.

திரு. கோவை செழியன் : மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது மாதிரி பஸ்கள் அடிக்கடி நடுவழியில் நின்று விடுவதால் பயணிகள் தொல்லை படுகிறார்கள். அதை நிவர்த்தி செய்வதற்கு ஆங்காங்கு மொபைல் ஒர்க் ஷாப் வைத்து, அதில் டெக்னீஷியன்களை வைத்தால் அதன் மூலம் அந்தப் பேருந்துகளை ரிப்பேர் செய்வதற்கு வசதி செய்து கொடுத்தால், அந்தக் கஷ்டங்கள் உடனடியாக நிவர்த்தியாகும். அது பற்றி அரசாங்கம் பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தின் அடிப்படையிலே தான் நீண்டதூர போக்குவரத்துப் பேருந்துகளுக்கு இந்த வசதி செய்யலாமா என்பதை பரிசீலித்து வருகிறோம். அதற்கான உத்தரவு முதற்கட்டமாக பிறப்பிக்கப் பட்டுள்ளது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, இப்போது அரசு போக்குவரத்து பேருந்துகளுக்கும், கழகப் பேருந்துகளுக்கும் இடையே ஒரு போட்டியே இருக்கிறது என்ற சந்தேகம் தோன்றும் விதத்தில் காரியங்கள் நடந்து வருகின்றன. இந்த மாதிரி நடப்பது சரியல்ல. அரசுப் போக்குவரத்துப் பேருந்துகள் வழியில் நின்று விட்டாலோ, அல்லது கழகப் பேருந்துகள் — அண்ணா போக்குவரத்து, பெரியார் போக்குவரத்து— பஸ்கள் நின்று விட்டாலோ, மற்ற கழக பேருந்துகளில் அந்த நின்று விட்ட பஸ் பயணிகளை ஏற்றிக்கொள்வது இல்லை. இப்படிப்பட்ட நிலை இருப்பதால் பயணிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதை சீரமைப்பு செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டிரான்ஸ்போர்ட் என்று வந்தால், எந்தக் கேள்வியும் கேட்டு விடலாமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : போட்டி இருப்பது என்றுமே நல்லது. ஆனால், பொறாமைதான் இருக்கக் கூடாது.

மாண்புமிகு திரு. பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

2. நடைமுறைக் கேள்வி

விவசாய அமைச்சர் அளித்த ஒரு விடை குறித்து.

திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, கேள்வி நேரத்தில் 304-ம் கேள்விக்கு விவசாய அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற போது, இது ஒரு புதிய திட்டம். அதாவது அஞ்சல் வழிப் பாடமுறை

என்ற புதிய திட்டம் இருந்தும் கூட அதில் படிக்கின்றவர்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்து வராமல், அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார். இது சரிதானா என்ற..........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது எப்படி பாயிண்ட் ஆப் ஆர்டர் ஆக முடியும்? அமைச்சர் கேள்விக்கு பதில் சொல்லாமலும் இருக்கலாம். ஆகவே இது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை.

3. 1975-76-ஆம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) நிதிக் கோரிக்கை எண். 18—மருத்துவம்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"நிதிக்கோரிக்கை எண் 18—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 30,93,98,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, சென்னை பெரிய மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவமனை ஆகியவற்றை விரிவுபடுத்தி கூடுதல் தனி அறைகள் கட்டுவது பற்றி விவாதிக்க, "நிதிக்கோரிக்கை எண். 18—மருத்துவம் என்ற தலைப்பில் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூபாய் 30,93,9,8000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. என். மருதாசலம்: வேலூர் சி. எம். சி. மருத்துவமனையின் நிலைமையைப்பற்றி விவாதிக்க, "நிதிக் கோரிக்கை எண். 18—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூபாய் 30,93,98,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

Thiru K. S. KOTHANDARAMIAH: Sir, to discuss the need to provide adequate maternity beds to the Government Hospital at Denkanikota in Dharmapuri district, I move "that the allotment of Rs, 30,93,98,000 under Demand No. 18—Medical be reduced by Rs. 10"

திரு. கோவை செழியன்: தலைவரவர்களே, மருத்துவக் கல்லூரியில் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதை கம்ப்யூட்டர் மூலம் செய்ய வேண்டியதின் அவசியத்தை எடுத்துக்கூற, "நிதிக்கோரிக்கை எண். 18—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூபாய் 30,93,98,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.